# மாவட்ட நீதிமன்றம், நாகப்பட்டினம்

## Sessions Case No. 06/2023

**நாள்:** 07.01.2025

**பெயர் : ரமேஷ்குமார்**

**PW1**

**<u>2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.1 ஆவணத்திற்கு முன்பாக ஒரு புகார் கொடுக்கப்பட்டு அந்த புகாரில் சம்ப இடம், நேரம், எதிரிகளுடைய பெயர், முன்விரோதம், எதிரிகள் நடந்த கொண்ட விதம், மேனர் ஆப் அக்ரன்ஸ் பார்ட்பிளைடு பை அக்யூஸ்ட் என்று அந்த முதலில் கொடுக்கப்பட்ட புகாரில் மாறுபட்டும் வேறுபட்டும் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் உள்ள புகார் அ.சா.ஆ.1 மிகவும் கால தாமதமாக 18.08.2022 காலை 7.30 இருந்து 8.00 மணிக்குள் உயர் காவல் அதிகாரிகள், என்னுடைய வழக்கறிஞர் மற்றும் எனக்கு வேண்டிய நான் சார்ந்துள்ள அரசியல் கட்சி பிரமுகர்கள் ஆகியோர்களுடன் கலந்து ஆலோசனை செய்து அதீத கர்பனையில் நடக்காத சம்பவங்களை நடந்ததாக ஜோடிக்கப்பட்டு எனக்கு வேறு காரணங்களில் பிடிக்காத நபர்களை சேர்ந்து இந்த புகாருக்கு வார்த்தை வடிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1ல் 10 நபர்கள் குறிப்பிட்டு மற்றும் கூலிபடையினர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதிலும் குறிப்பாக எனக்கே தெரிந்த காரணத்தினால் 2 வது எதிரி ரோசரி கிரேட்டன் பெயர் உள்நோக்கத்துடன் இணைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் உள்ள புகாரினை கைப்பட எழுதியது யார் என்றால் நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதி கொண்டார்கள். அதனை எழுதியது எந்த காவலர் என்று எனக்கு தெரியாது. அ.சா.2 மணிவேல் பேச முடியாமல் பதட்டமான நிலையில் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளான சங்கதிகள் ராஜுகாந்தி, வீராச்சாமி, அறிவழகன் மற்றும் அ.சா.2 மணிவேல் சொன்னதாகதான் சொல்லியுள்ளேன். மேற்படி 5 நபர்களும் என்னிடம் எந்த செய்திகளும் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை பற்றி கூறவில்லை என்றால் சரியல்ல. நானும் உயர் காவல் அதிகாரிகளும் கலந்து ஆலோசனை செய்து பின்னர் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட சங்கதிகள் என்றால் சரியல்ல. எனது தம்பி இறந்து போன மனோகருக்கு குடி பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. நான் மனோகர் இறால் பண்ணை வைத்துள்ளோம். அன்று இரவு சுமார் 8.00 இருந்து 8.30க்குள் வேளாங்கண்ணி ஆர்சில்

உள்ள லாட்ஜில் இறால் வளர்ப்போர் சங்க கூட்டம் நடந்தது அதில் அவர் கலந்து கொண்டார் என்று சொன்னால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. இந்த விவரம் எனக்கு தெரியும் என்றும், அதனை சொன்னால் பாதகமாகிவிடும் என்று நினைவில்லை என்று மழுப்பலாக பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வேளாங்கண்ணி மெயின் ரோட்டில் உள்ள மெயின் ஆர்ச்சிக்கும் இறந்து போன மனோகர் வைத்திருந்த பைனான்ஸ் கடைக்கும் 2 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. அரை கி.மீ. அல்லது முக்கால் கி.மீ. இருக்கும். வேளாங்கண்ணி ஆர்ச்சில் இருந்து உள்ளே போகும் போது காடாக இருந்ததாக நினைவில்லை, சின்னசின்ன மரங்கள் இருக்கலாம். இறந்து போன மனோகர் இறால் வளர்போர் சங்க கூட்டத்தை முடித்துவிட்டு 8.00 இருந்து 8.30 மணிக்கு வரும் போது அந்த மரங்கள் இருந்த பகுதியில் அவர் போதையில் தடுமாற்றமாக வந்த போது முகம் தெரியாத, இனம் தெரியாத சில நபர்கள் அவரை தாக்கி காயப்படுத்தினார்கள் என்றும், அதில் அவர் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன முன் விரோதத்தை தவிற வேறு சில நபர்கள் பரவை, தெற்கு பொய்கைநல்லூர் மனோகர் செய்த வியபாரம் தொடர்பாக எதிரிகள் உள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த நபர்களின் தூண்டுதலில் அவர் அன்றை தினம் தாக்கப்பட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் மோப்ப நாய் வரவழைக்கப்படதா என்றால் எனக்கு அது சம்மந்தமாக தெரியாது. எனக்கு மணிவேல் தொடர்பு கொண்டதாக சொல்லப்படும் எனது செல் போலீசாரிடம் கொடுக்கபடவில்லை. மணிவேல் செல் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியவில்லை. 17.08.2022 இரவு 9.30 மணிக்கு அ.சா.2 மணிவேல் போன் மூலம் தகவல் எதுவும் எனக்கு சொல்லப்படவில்லை என்பதால் தான் இருவர் செல்போனும் போலீசாரிடம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் மணிவேல் போன் மூலம் கிரேடனும் அவருடன் உள்ள மூன்று நபர்களும் கடைக்குள் புகுந்தார்கள் எங்கள் தலைவர் அப்பான் @ மகேஷ்வரன் எதுக்கிரியாடா இதோடு சாகுங்கடா என்று என்னை வெட்டினார் என்றும் சீக்கிரம் வாங்க என்று சொன்னார் இந்த சம்பவங்கள் நடந்ததாக மணிவேல் தெரிவித்தாக சொல்லியிருப்பது அ.சா.2 மணிவேல் என்னிடம் அப்படி எதுவும் சொல்லவில்லை, நானாக இந்த வழக்கை முன்னேற்றுவதற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எனது அப்பா வீராச்சாமி, எனது தம்பி மணிவண்ணன், நண்பர் சரவணன் ஆகியோர் காரை எடுத்து கொண்டு நேராக நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு இறந்த மனோகர் பிரேதம் கிடத்தப்பட்டிருந்த சடல கூறாய்வு செய்யும்

இடத்தில் வந்து தான் பார்த்தோம் என்று சொன்னால் சரியல்ல. எனது தம்பி இறந்த மனோகர் எனது காரில் தான் ஏற்றப்பட்டார். அந்த காரில் நானும் எனது அப்பா வீராச்சாமியும் தம்பி மணிவண்ணன், நண்பர் சரவண் ஆகியோர் தான் ஏற்றினோம் என்று சொன்னால் இல்லை. அங்கு உள்ள நபர்கள் ஏற்றினார்கள். அந்த ஏற்றிய நபர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நானும் மற்று ஒரு நபரும் காரில் பின் சீட்டில் வேளாங்கண்ணியில் இருந்து நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு வரும் வரை உட்கார்ந்து இருந்தாகள் என்றால் சரிதான். நான் போட்டிருந்த ஆடையில் இரத்தம் படிந்து இருந்ததா என்றால் நினைவு இல்லை. நினைவு இல்லை என்று நான் மழுங்கலாக பதில் சொல்வதற்கு காரணம் இரத்தம் எதுவும் படியவில்லை என்பதால் தான் என்று சொன்னால் அது சரியல்ல. இரத்தம் படியாததற்கு காரணம் நாங்கள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நாங்கள் இறந்த மனோகரை பார்க்க போகவில்லை, நேரடியாக மருத்துவமனைக்கு தான் வந்தோம் என்றால் சரியல்ல. என்னுடன் வந்த சரவணன் எனக்கு நெருக்கமான நண்பர். சாதாரண மனித இயல்புகளில் நாங்கள் இரத்த உறவுகள் என்பதால் நாங்கள் இறந்து போனவரை தூக்கி இருப்போம், கட்டி அழுதிருப்போம் என்பது இயல்பானது நாங்கள் அவ்வாறு செய்யவில்லை என்பதால் நாங்கள் அந்த இடத்திற்கு போகவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதன் பின்பு தெற்கு பொய்கை நல்லூர் மணிகண்டன், ராஜிவ்காந்தி அவர்கள் இருவரும் என்னிடம் வந்து மனோகரை பார்ப்பதற்காக இரவு 8.30 மணிக்கு வேளாங்கண்ணிக்கு போய் கொண்டு இருந்த போது சிவன் கோவில் சின்ன பாதையில் விளக்கு வெளிச்சத்தில் கிரேடன், ஆகாஷ் ஆகியோருடன் 5, 6 நபர்கள் கூட்டமாக நின்று கொண்டு இருந்தார்கள் என்றும், ஆகாஷ் எனக்கு தெரியும் அப்போது மணிகண்டனும், ராஜிவ்காந்தியும் ஆகாஷிடமும் கிரேடனிடமும் என்னப்பா கூட்டமாக இருக்கின்றதே என்று கேட்டதாகவும், அதற்கு அவர்கள் இருவரும் அவர்கள் சென்னையில் இருந்து வந்து இருப்பதாகவும் சொன்னார்கள் என்றும், அதன் பின்னிட்டு அவர்கள் மனோகர் கடைக்கு பணம் வாங்குவதற்கு சென்று உள்ளார்கள் என்று நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விளக்கு வெளிச்சத்தில் கிரேடன், ஆகாஷ் 5,6 நபர்கள் கூட்டமாக இருந்தார்கள் என்றும், ஆகாஷ் எனக்கு தெரியும் என்றும், அப்போது மணிகண்டனும் ராஜுகாந்தியும், என்னப்பா கூட்டமாக இருக்கிறதே என்று கேட்டதாகவும், அவர்கள் சென்னையில் இருந்து வந்திருப்பதாக சொன்னார்கள் என்று நான் சொல்லியுள்ள சங்கதிகள் மேற்படி நபர்கள் என்னிடம்

சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த நபர்கள் சொல்லியுள்ள மேற்படி சங்கதிகள் கிரேடன், ஆகாஷ் 5,6 நபர்கள் அந்த இடத்தில் இல்லை என்றும், மணிகண்டனும், ராஜுகாந்தியும் அந்த இடத்தில் அவர்களை பார்க்கவில்லை என்றும், சாட்சிகள் இருவரும் அந்த இடத்தில் இல்லை என்றும், இது முற்றிலும் பொய்யான தகவல்கள், அவர்கள் இந்த வழக்கின் போக்கினை ஊர்ஜிதப்படுத்துவதற்காக போலீசாரும், நாங்களும் பிற்பாடு கலந்து ஆலோசித்து இவ்விதம் சொல்லப்பட்ட சங்கதிகள் என்று சொன்னால் சரியல்ல. மணிகண்டனும், ராஜுகாந்தியும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பைனான்ஸ் கடைக்கு 8.30 மணிக்கு போனததாகவும் லேட்டாக வருவோம் என்று சொல்லியுள்ளதாகவும், ராஜுகாந்தியும், மணிகண்டனும் எங்களுக்கு நெருக்கமான உறவுகாரர்கள் என்றால் தவறு. அவர்கள் எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள். மேற்படி சாட்சிகள் மணிகண்டன், ராஜுகாந்தி வசிக்கும் இடத்திற்கும் சிவன் கோவில் சின்ன பாதைக்கும் 5 கி.மீ என்றால் சரியல்ல. அது 2 1/2 இருந்து 3 ½ கி.மீ இருக்கும். வேளாங்கண்ணி சிவன் கோவில் சின்ன பாதையில் அடர்த்தியாக வீடுகள், பெட்டி கடைகள் உள்ளன என்றால் எனக்கு நினைவில்லை. நினைவில்லை என்ற மழுங்கலான பதிலை நான் சொல்வதற்கு காரணம் அந்த இடத்தில் வீடுகளும், பெட்டிகடைகளும் உள்ளன என்பதால் தான் என்றால் சரியல்ல. அதற்க்கு பின்பு தெற்குபொய்கைநல்லூரை சேர்ந்த அறிவழகனும், விழுந்தமாவடியை சேர்ந்த வீராச்சாமியும் என்னிடம் நாங்கள் பரவைக்கு சென்றோம். பரவைக்கு போகும் வழியில் புதிய சந்தையில் இருவரும் பேசி கொண்டு இருந்தததாகவும், அப்போது தெற்கு பொய்கைநல்லூரை சேர்ந்த அப்பான் (எ) மகேஷ்வரன், அவரது தம்பி மதியழகன், அவருடைய ஆட்கள் விஜய், குணா, முருகானந்தம், ரமேஷ், அருளரசன், சுப்பிரமணியன் ஆகிய எல்லோரும் சேர்ந்து புதிய சந்தையில் லைட் வெளிச்சத்தில் பைக்கை நிறுத்தினார்கள் என்றும். பைக்கை நிறுத்திய சிறிது நேரத்தில் வேளாங்கண்ணியில் இருந்து நான்கு பைக்கு வேகமாக வந்து புதிய சந்தையில் நின்றது என்றும். அந்த பைக்கில் இருந்து இறங்கி கிரேடனும், ஆகாஷ்சும் நீங்கள் சொன்ன மாதிரி மனோகரை வெட்டிவிட்டோம் என்றும், கூட இருந்த மணிவேலையும் வெட்டிவிட்டோம் என்றும், நீங்கள் சொன்னது மாதிரியே நாங்கள் செய்து விட்டோம் என்று சொன்னவுடன் நீங்கள் அந்த இடத்தை விட்டு கிளம்புங்கள் நான் மீதியை பார்த்து கொள்கிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டு உடன் அப்பானும் அவருடன் இருந்தவர்களும் சென்றுவிட்டார்கள் என்று முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள சங்கதிகள் அப்பட்டமான பொய்

என்றும், அந்த சங்கதிகளை எனக்கு அறிவழகனும், வீராச்சாமியும் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. பரவை புதிய சந்தை என்ற இடத்தில் அறிவழகனும், வீராச்சாமியும் அவர்கள் பேசி கொண்டு இருந்ததாக பொய்யாக விவரங்களை சொல்லியுள்ளார்கள் என்றும் இந்த விவரங்களை வழக்கின் முன்னேற்றத்திற்காக ஜோடனையாக தயார் செய்யத்துள்ளோம் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் அறிவழகனும் இல்லை, வீராச்சாமியும் இல்லை, அப்பான் மகேஷ்வரன், மதியழகன், விஜய், குணா, முருகானந்தம், ரமேஷ், அருளரசன், சுப்பிரமணியன் ஆகியோர் லைட் வெளிச்சத்தில் பைக்கை நிறுத்தவில்லை என்றும், அவர்கள் நிறுத்திய சிறிது நேரத்தில் நான்கு பைக்கு வேகமாக வந்தது என்றும், வந்து புதிய சந்தையில் நின்றது என்றும், அந்த பைக்கில் இருந்து கிரேடனும், ஆகாஷ்ம் நீங்கள் சொன்னது மாதிரி மனோகரை வெட்டிவிட்டோம் என்றும், கூட இருந்த மணிவேலையும் வெட்டிவிட்டோம் என்றும், நீங்கள் சொன்னது மாதிரி செய்துவிட்டோம் என்றும், நீங்கள் அந்த இடத்தை விட்டு கிளம்புங்கள் மீதியை நான் பார்த்து கொள்கிறேன் என்று அப்பானும் அவர் கூட இருந்தவர்களும் சொல்லியிருப்பது இந்த வழக்கில் போக்கும் அமைப்பையும் உறுதி செய்வதற்காக என்னாலும் காவல் துறையாலும் ஜோடிக்கப்பட்ட சங்கதிகள் என்றாலும், அவர்கள் சொன்னதாக சொல்லப்படும் மேற்படி நபர்கள் அந்த இடத்தில் இல்லை என்றும், குறிப்பாக கிரேடனும், ஆகாஷ்ம் அந்த இடத்ததிற்கு வரவில்லை என்றும், சாட்சிகள் அறிவழகனும், வீராச்சாமியும் அந்த இடத்தில் இல்லை என்றும், இந்த விவரங்கள் மிகுந்த பொய்யை கொண்டது என்றும், என்னிடம் இந்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டது பொய்யானது என்றும், நானும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விழுந்தமாவடி சேர்ந்த வீராச்சாமி வசிக்கும் இடத்திற்கும் பரவை புதிய சந்தைக்கும் 10 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். அறிவழகன் வசிக்கும் இடத்திற்கும் புதிய சந்தைக்கும் 3 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. அது 1 ½ கி.மீ. தூரம் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மனோகர் பைனான்ஸ் கடைக்கும் வேளாங்கண்ணி காவல் நிலையத்திற்கும் அரை கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். அந்த இடத்தின் அருகில் ஒருபக்கம் நெருக்கமான கடைகள் உள்ளது என்றால் சரிதான். அது மிகவும் சுருசுருப்பாக உள்ள சாலை என்றால் சரிதான். அந்த இடத்தில் போலீஸ் பீட் உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் மனோகரை காரில் ஏற்றும் போது வேளாங்கண்ணி போலீசார் வந்தார்களா என்பதனை நான் பார்க்கவில்லை. நான் அந்த இடத்திற்கு போகவில்லை, அதனால் தான் பார்க்கவில்லை

என்று பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பைனான்ஸ் அறையில் உள்ள அன்றைய தினம் சி.சி.டி.வி கேமரா செயல்பாட்டில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த இடத்தில் தரையில் விரிப்பு விரிக்கப்பட்டிருந்தது என்றால் நினைவில்லை. அந்த இடத்தில் மேஜை விரிப்பு, தரை விரிப்பு கைபற்ற படவில்லை என்பதால் நினைவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த இடத்திற்கு போலீசார் நாங்கள் சென்று பிற்பாடு அந்த இடத்தில் சில இடங்களில் இறந்த மனோகரையும், இரத்தங்களை தடவி சாட்சியமாக பொய்யாக உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. பைனான்ஸ் கடையில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், அங்கு இறந்த மனோகருக்கு அ.சா.2 மணிவேலுக்கும் காயங்கள் ஏற்படுத்தப்படவில்லை என்றாலும் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிப்பதால் முன்னுக்கு பின் முரனாகவும், ஒன்றுக்கு ஒன்று முரனாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.